1994 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஜல்லி உடைக்கும் சங்கத் தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான குறைந்த பட்ச தினக்கூலி நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) நீலகிரி, கூடலூர் தாலுகா, பாக்கனாவில், 26-9-1994 அன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு எடுக்கப் போகிறேன். (குறுக்கீடு) வேறு ஒரு பிரச்சினையை எடுக்கப் போகிறேன், உட்காருங்கள்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா, நெல்லியாளம்-2 கிராமம், பாக்கனா என்ற ஊரில் 26-9-94 அன்று நடந்த துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டுள்ள நிலையைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. எச். எம். ராஜு ஒரு அறிவிப்பை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். (குறுக்கீடு) இருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: நான் நேற்றே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதே பொருள் பற்றி தாங்களும் அறிவிப்புக் கொடுப்பதாக திரு. கே. பி. ராஜு அவர்களும், திரு. சிங்காரம் அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. எச். எம். ராஜு.

[*1994 நவம்பர் 10*

***திரு. எச். எம். ராஜூ :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த அறிவிப்பைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, என்னைப் பேச அனுமதித்ததற்காக முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச அனுமதிக்கவில்லை. அதுபற்றி சுருக்கமாகச் சொல்லத்தான் அனுமதி.

திரு. எச். எம். ராஜூ: அது பற்றிச் சுருக்கமாக இரண்டு மணித் துளிகள் பேசுகிறேன் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா, நெல்லியாளம்-2 கிராமம். புத்தூராயன் வயல் என்ற ஊரில் சுமார் 15 ஏக்கர் 'லீஸ்' பூமியில் விவசாயம் செய்து வந்த பி.கே. சையத் அலிவி, கே. அம்சா, சி. கம்மு, முகமது அலி, எம். ஏ. அம்சா ஆகியோரை 'சசெக்ஸ் எஸ்டேட்' நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் மூலமாக நீதிமன்றத்தின் உறுத்துக் கட்டளை இருந்தும், 18-8-1994 அன்று அவர்களை பலாத்காரமாகக் காலி செய்தார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் ஒரு உறுத்துக் கட்டளையை 5-9-1994 அன்று நமது சென்னை உயர்நீதிமன்றத்தில் பெற்றிருந்தார்கள். 26-9-1994 அன்று மேற்கண்ட விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு மீண்டும் செல்லும்போது எஸ்டேட் நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், அந்த விவசாயிகளுக்கும் தகராறு ஏற்பட்டது. அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் இந்தச் சம்பவம் குறித்து அந்தக் கிராமத்தில் குன்னலாடி கிராமத்தைச் சேர்ந்த வர்கீஸ் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதே நாளில் அன்று மாலை சுமார் 5.30 மணிக்கு புத்தூரான் வயலிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் தள்ளி பாக்கனா என்ற ஊரில் பந்தலூர் உதவி காவல் துறைக் கண்காணிப்பாளர் சீரான சீருடை இல்லாமலும், அங்கு கூடியிருந்த சுமார் 50, 60 மக்களை எந்தவிதமான எச்சரிக்கையும் செய்யாமலும், தடியடிப் பிரயோகம் செய்யாமலும், கண்ணீர்ப்புகை செலுத்தாமலும், பயமுறுத்தும் வகையில் வானை நோக்கி 1, 2 முறை சுடாமலும், அத்தியாவசியமில்லாமல் நீலகிரி மாவட்டத்தில் முதல் முறையாக ஒரு துப்பாக்கிச் சூட்டை நடத்தி 2 முறை சுட்டதில் சுமார் 17 வயது சிறுவன், ஷாஜஹான் என்பவருக்கு வயிற்றில் குண்டு பாய்ந்து, பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார். இரண்டாவது குண்டு திரு. எம். பி. ஹுசைன் என்பவருடைய டீக்கடைச் சுவரைத் தாக்கி துளை போட்டுள்ளது.

தாய்மார்கள் உட்பட கிராமத்து மக்கள் பீதி அடைந்து ஊரைவிட்டு ஓடியிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் ஊர் வந்து சேரவில்லை. காவல் துறையினர் மேன்மேலும் அவர்கள் மேல் வழக்குப் போடுவதாக பயமுறுத்தி வருகிறார்கள். மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். பிரபு அவர்களும், நாங்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டோம். நிகழ்வினைப் பற்றி அறிந்தோம். மாவட்ட அதிகாரிகளையும், காவல் துறையினரையும் சந்தித்து இவற்றைப் பேசிய பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட மூத்த அதிகாரிகள் 18-10-1994-ல்தான் முதன்முறையாக அந்த இடத்தைச் சென்று பார்த்தார்கள். ஆகவே அண்மையில் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டிற்கு நமது அரசு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேல் தகுந்த நடவடிக்கை எடுத்தது போல, அமைதியை எப்போதும் விரும்பும் நீலகிரி மாவட்டத்து மக்களுக்காக, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீதி விசாரணைக்கான அறிவிப்பை இன்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப் பிரச்சினை கூடலூர் தொகுதியைச் சம்பந்தப்படுத்துவதாக இருக்கிற காரணத்தால் திரு. கே. ஆர். ராஜு, அவர்களுடைய கருத்தையும் சொல்லலாம்.

திரு. கே. ஆர். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாக்கனா என்ற கிராமத்தில் உள்ள சில நபர்களுக்கும், சசெக்ஸ் என்ற எஸ்டேட் நிர்வாகத்தினருக்கும் இடையே எல்லைப் பிரச்சினை இருந்து வந்தது. இரு தரப்பினரும் கூடிப்பேசி, சுமூகமான முறையில் நல்லதொரு தீர்ப்பு கண்டு வேலியும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் 5 பேர்களும், அவர்களைச் சேர்ந்த, அருகில் உள்ள கேரள மாநிலத்தில் உள்ள சுமார் 300 அடியாட்களும் சேர்ந்து, மீண்டும் அந்த நிலத்தைக் கையகப்படுத்த வன்முறையில் ஈடுபட்டிருந்தார்கள். எஸ்டேட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையே வன்முறையும், தகராறும் ஏற்பட்டது. ஓரிருவர் இறந்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் எஸ்டேட் தொழிலாளர்களின் வீடுகளுக்கும் தீ வைத்திருக்கிறார்கள். எஸ்டேட்டில் பணி புரிந்து வந்த காவலாளி ஒருவரைக் கடத்திச் சென்று கிராமத்தில் கட்டி வைத்து

துன்புறுத்தியிருக்கிறார்கள். இதை அறிந்த காவல் துறையினர் அவரை மீட்க அந்த கிராமத்திற்குச் சென்றபோது முன்னேற விடாமல் கற்களாலும், தடிகளாலும் தாக்கி உள்ளார்கள். காவல் துறையினரில் 4 பேர்களுக்குக் காயம் ஏற்பட்டு கீழே விழுந்திருக்கிறார்கள். இதைத் தடுக்க காவல் அதிகாரி வானத்தை நோக்கி சுட்டிருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு சுடவில்லை என்றால் கலவரத்தில் அதிக உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கும். சரியான நேரத்தில் காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையால் அதிக உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எந்தவித உயிர்ச்சேதமும் இல்லை. காவல் துறை, பொது மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அதிக உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் வண்ணம் உடன் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆகவே ஆக்கிரமிப்பாளர்களால் மீண்டும் கலகம் ஏற்பட்டுவிடாமல் வன்முறையில் ஈடுபடும் விஷமிகளை அடையாளம் கண்டு, கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

***மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் உள்ள சசெக்ஸ் எஸ்டேட் நிர்வாகத்தினர் வசமிருந்த 17 ஏக்கர் நிலத்தில், தனியார் சிலர் ஆக்கிரமிப்பு செய்திருந்ததாகவும், 18-8-1994 அன்று எஸ்டேட் நிர்வாகத்தினர், தங்கள் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்களை அப்புறப்படுத்தியதாகவும் தெரிகின்றது. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றியதை எதிர்த்து சையது அலிலி என்கிற அம்சா என்பவர் 5-9-1994 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இவர் இந்தப் பகுதியில் பல்வேறு குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர் என்றும், பல வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்றும் தெரிகிறது.

26-9-1994 அன்று 200 பேர் கொண்ட கும்பல் ஒன்று பயங்கர ஆயுதங்களுடன் சசெக்ஸ் எஸ்டேட்டில் அத்துமீறி நுழைந்து முன்பு ஏற்கெனவே ஆக்கிரமிப்பு செய்திருந்த நிலத்தில் மீண்டும் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததாகத் தெரிகிறது. போகும் வழியில் 5 குடிசைகளுக்குத் தீ வைத்ததோடு, எஸ்டேட்டின் சில உடைமைகளுக்கும் சேதம் விளைவித்துள்ளார்கள். இது குறித்து தகவல் கிடைத்த உடன் கூடலூர்

1994 நவம்பர் 10] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

வருவாய்க் கோட்ட ஆட்சியர் மற்றும் தேவாலா கோட்ட காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், காவலர்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளார்கள. காவல் துறையினர் வருவதற்கு முன்பே அத்துமீறி நுழைந்த கூட்டத்தினர் ஆரோக்கியசாமி என்பவரை அடித்துத் துன்புறுத்தி உள்ளதாகத் தெரிகிறது. பின்னர், காவல் துறையினர் அந்த இடத்திற்கு வந்தடைந்ததும், கலகக்காரர்கள், காவலர்கள் மீதும் கல்லெறிந்துள்ளார்கள். கல்வீச்சு சம்பவத்தில் நான்கு காவலர்கள் காயம் அடைந்துள்ளனர். கலகம் செய்த கும்பலைக் கலைக்கவும், பொது அமைதியை நிலை நாட்டவும், காவல் துறையினரின் தற்காப்பிற்காகவும், கூடலூர் வருவாய்க் கோட்ட ஆட்சியரின் எழுத்துப் பூர்வமான ஆணையைப் பெற்றுக்கொண்ட பின்பு, காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், கலகக் கும்பலுக்கு, பலமுறை எச்சரிக்கைகளை விடுத்துள்ளார். கலகக் கும்பல் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் துப்பாக்கியால் 3 முறை வானத்தை நோக்கிச் சுட்டு இருக்கிறார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் வன்முறையில் ஈடுபட்ட கும்பலில் இருந்த ஷாஜஹான் என்பவரும், எஸ்டேட்டில் பணி புரிந்து வந்த ஷாஜஹான் என்பவரும் (இருவர் பெயரும் ஷாஜஹான்) காயமடைந்துள்ளனர். பின்னர் சிகிச்சைக்காக இருவரும் உதகமண்டலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

முற்பகல் 11-20

கும்பலைக் கலைக்க தடியடிப் பிரயோகமோ, கண்ணீர்ப்புகை வீச்சோ செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் கும்பல் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதால், துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய கட்டாயம ஏற்பட்டதாகவும் தெரிகிறது. கலகக் காரர்களின் தாக்குதலால் ரத்தக் காயம் அடைந்த ஆரோக்கியசாமியை காவல் துறையினர் கலகக்காரர்களிடமிருந்து மீட்டு, மருத்துவ சிகிச்சைக்காகக் கூடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், 4 காவலர்கள் உட்பட, 39 பேர் காயம் அடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக நெலக்கோட்டா காவல் நிலைய குற்ற எண்கள் 90/94 மற்றும் 91/94-ல் இந்தியத் தண்டனைச் சட்டம், 147, 148, 341, 323, 324, 332, 366 மற்றும் 307 ஆகிய பிரிவுகளின் கீழும், இந்திய சாட்சி சட்டம், பிரிவு 5-ன் கீழும், இரண்டு

வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் அம்சா மற்றும் சிலர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் தொடர்பாக, காவல் துறையினர் இதுவரை 10 நபர்களைக் கைது செய்துள்ளனர். குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களை காவல் துறையினர் தேடி வருகிறார்கள்.

பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்து, வன்முறையில் ஈடுபட்டவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக, இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காவல் துறையினருக்கு எழுந்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

(ஆ) அரியலூர் வட்டத்திலும், ஆண்டிமடத்திலும் மூளைக்காய்ச்சல் நோய் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் வட்டத்திலும், குறிப்பாக ஆண்டிமடத்திலும் மூளைக் காய்ச்சல் நோய் பெரும் அளவில் இருப்பதாகத் தெரிவித்து திரு. ஆர். தங்கராஜ், டாக்டர் சு. மணிமேகலை ஆகியோர் ஒரு அறிவிப்பைக் கொடுத்துள்ளனர். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். திரு. ஆர். தங்கராஜ்.

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் நிராகரித்து இருக்கிறேன். நீங்கள் என்னுடைய அறையிலே வந்து உட்கார்ந்து கொண்டு யாராவது ஒரு உறுப்பினர் கொடுக்கின்றபோது என்னுடைய பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று எழுதிவிட்டு வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த அறிவிப்பு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல வருடங்களாகவே பருவ மழை பெய்கின்ற ஒவ்வொரு ஆண்டும் அரியலூர் தாலுக்கா, பெரம்பலூர் தாலுக்கா, ஜெயங்கொண்டம் தாலுக்கா ஆகிய 3 தாலுக்காக்களிலும் இதைப் போன்ற ஒரு கடுமையான ஜுரம் ஏற்படுகிறது அங்கே அந்த ஜுரம் ஏற்படுகிற போது அந்தப் பிள்ளைகளுக்கு எல்லாம் வலிப்பு நோய்